# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 65.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

[2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 5/2014

### 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், எல்லா நோக்கங்களுக்காகவும் 2014, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தினைத் திருத்துதல்.*

**2.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டமானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) முதன்மைச் சட்டவாக்கத்தில் ''சிரேஷ்ட பிரதி ஆணையாளர் தலைமையதிபதி'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, ''மேலதிக ஆணையாளர் தலைமையதிபதி'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) முதன்மைச் சட்டவாக்கத்தில் ''ஆணையாளர்'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, ''சிரேஷ்ட ஆணையாளர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) முதன்மைச் சட்டவாக்கத்தில் ''பிரதி ஆணையாளர்'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, ''ஆணையாளர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

2-PL 008092 -875 (2014/03)

(4) முதன்மைச் சட்டவாக்கத்தில் ''சிரேஷ்ட வரிமதிப்பீட்டாளர்'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, ''பிரதி ஆணையாளர் அல்லது சிரேஷ்ட பிரதி ஆணையாளர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(5) முதன்மைச் சட்டவாக்கத்தில் ''வரிமதிப்பீட்டாளர்'' என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக ''வரிமதிப்பீட்டாளர் அல்லது உதவி ஆணையாளர்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) (lxviii) என்னும் உட்பந்தியில், ''அபிவிருத்தி வங்கி ; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அபிவிருத்தி வங்கி;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) (lxix) என்னும் உட்பந்தியில் ''ஏதேனும் தனியார் பாடசாலை.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் தனியார் பாடசாலை;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) உட்பந்தி (lxix) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(lxx) 2006ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை;

(lxxi) *1980ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சந்தைப் படுத்தல் நிறுவகம்;*

(lxxii) *1986ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, இலங்கை பௌதீகவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பௌதீகவி யல் நிறுவகம்; அத்துடன்*

(lxxiii) *(87ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தின் 114ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட லயனல் வென்ட் ஞாபகார்த்த நிதியம்.'';*

*(2) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் ''அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கு நேர்முற் போந்த வரிமதிப்பீட்டாண்டுக்கான''என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*

*(3) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியில் ''இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் இலாபங்களும் வருமானமும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் இலாபங்களும் வருமானமும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்*

*(4) (ஔ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-*

*''(க) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறு சர்வதேச வலையமைப் பிலான நிறுவனங்களின் தலைமையகங்களை அல்லது பிராந்தியத் தலைமை அலுவலகங்களை இலங்கையில் இடத்தை மாற்றி அமைப்பதன் மூலம் 2013, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் இலாபங்களும் வருமானங்களும்.''.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்தியில், ''அத்தகைய வாகனத்தை வழங்குவதற்குப் பதிலாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் படி,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய வாகனத்தை வழங்குவதற்குப் பதிலாக செலுத்தப்பட்ட ஏதேனும் படியின் மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் போக்குவரத்து வசதியின் பெறுமதியின் கூட்டுமொத்தம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியில், ''ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாத அத்தகைய பாகம்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ய) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ர) அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அவருடைய ஊழியத்திலிருந்தான வருமானத்திலிருந்து வரி கழிக்கப்பட்டிருப்பின் ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலில் ஈடுபட்டிராத ஊழியரொருவராக இருக்கின்றவரான எவரேனும் தனியாளின் ஊழியத்திலிருந்தான ஏதேனும் வருமானம் அல்லது இறுதி வரியாக மூலத்தில் வரிவிதிக்கப்படற்பாலதான எவையேனும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த, அத்தகைய இலாபங்களினதும் வருமானத்தினதும் கூட்டுமொத்தம் நாற்பத்தெட்டாயிரம்

ரூபாவிற்கு மேற்படாதிருப்பின், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு நாற்பத்தெட்டாயிரம் ரூபாவினை விஞ்சாத இலாபங்களும் வருமானமும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்துக்கு அல்லது அரசாங்க நிறுவனம் எதற்கும் அல்லது அப்போதைக்கு இலங்கையில் தொழிற்படும் ஏதேனும் வணிக வங்கிக்கு அல்லது வேறு ஏதேனும் பொறுப்பு முயற்சிக்கு,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய கம்பெனி, பங்குடைமை அல்லது ஆட்கள் குழு இலங்கையில் நிரந்தரத் தாபனம் ஒன்றை அல்லது ஏதேனும் தொழில் தொடர்பைக் கொண்டிருப்பது எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் உள்ள எவரேனும் ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில், ''ஏதேனும் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிலிருந்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பிணையங்கள் முதலீட்டு கணக்கிலிருந்து'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. 2012ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஓ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தில் "ஏற்புடையதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏற்புடையதாதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஔ) முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்குலாபம் அக்கம்பெனியினால் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பங்கு இலாபம் பெறப் பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்பட்டிருப்பின், அக்கம்பெனியினால் பெறப்பட்ட (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய பங்கு இலாபத்தில் இருந்து கம்பெனி ஒன்றின் பங்குதாரர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் பங்கு இலாபம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (லலலலலலல) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(லலலலலலலல) 2014, ஏப்பிரல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் புலமைச் சொத்தை கொள்ளு வதுடன் அத்தகைய புலமைச் சொத்தில் இருந்து அரசுரிமைத்

தொகை என்றவாறு இலாபங்களையும் வருமானத்தையும் ஈட்டுகின்றவரான இலங்கையில் வதிவுள்ளவரான எவரேனும் ஆளின் இலாபங்களும் வருமானமும், அத்தகைய அரசுரிமைத் தொகையானது வங்கி ஒன்றினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டும் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டும் இருப்பின் ;''; அத்துடன்

(2) அப்பிரிவின் (வவவவவவவ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(வவவவவவவவ) ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட் அல்லது மிஹின் லங்கா (பிறைவெட்) லிமிட்டெட்டின் விசேட தேவைப்பாடு ஒன்றாக அத்தகைய எயார் லைன்ஸினால் ஏதேனும் கணினி மென்பொருளின் பாவனைக்கெனச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவிலிருந்து இலங்கைக்கு வெளியேயுள்ள நாடொன்றிலுள்ள ஏதேனும் கம்பெனி, பங்குடைமை அல்லது ஆட்கள் குழுவிற்கு எழுகின்ற அல்லது திரளுகின்ற இலாபங்களும் வருமானமும்; அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானங்களின் இரட்டை வரிவிதிப்புக்கான நிவாரணத்தை வழங்கு

கின்ற இரட்டை வரி தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்று இலங்கைக்கும் மற்றும் அந்த நாட்டுக்கும் இடையில் நடைமுறையில் இல்லாதிருப்பின் அல்லது வரியானது அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானம் மீது அத்தகைய நாட்டில் செலுத்தப்படற்பாலதாகவில்லாதிருப்பின்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**8**. 2013 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவு "இரண்டாயிரத்து பன்னிரெண்டு, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தாபிக்கப்பட்டதும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2012, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னராக தாபிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16உ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16உ என்னும் பிரிவு "சேதன உரங்களை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சேதன உரங்களை அல்லது உயிரியல் உரங்களை'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**10**. 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "ஏதேனும் செயற்பாடு;" என்னும் சொற்களில் இருந்து அப்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"ஏதேனும் செயற்பாடு;

(ஆ) 2011, மாச்சு 31 ஆந் தேதிக்குப் பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னதாக நிலையான சொத்துக்களைக் கொள்ளுதலில் அதனால் முதலிடப்பட்ட தொகையானது (1)ஆம் உட்பிரிவிற்கான அட்டவணையின் 1 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட நேரொத்த தொகையைவிட குறைவானதாக இல்லாதிருக்கின்றதுமான;

(இ) அதன் வர்த்தகச் செயற்பாடுகளை 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னதாகத் தொடங்குகின்றதுமான; அத்துடன்

(ஈ) ஏற்கனவே உள்ளதாய் இருந்த ஏதேனும் தொழிலின் பிரித்தலின் அல்லது மீள் நிர்மாணத்தின் அல்லது கொள்ளுதலின் மூலம் உருவாக்கப்பட்டதாக இல்லாததுமான,

ஏதேனும் பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''முதலீடு'' என்பது, ஏதேனும் காணியின், பொறித்தொகுதியின், இயந்திரத் தொகுதியின், உபகரணத்தின் மற்றும் வேறு நிலையான சொத்துக்களின் ஆகுசெலவு எனப் பொருள்படும்.''.

**11.** 2008 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''ஒரு புதிய பொறுப்பு முயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டினுள் செய்யப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டின் அத்தகைய'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய பொறுப்புமுயற்சியைத் தொடங்கியதிலிருந்து ஓராண்டிற்குள் ஆனால் 2014, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னராகச் செய்யப்பட்ட இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத முதலீட்டுடன் ஒரு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ப) என்னும் பந்தியில் "செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை." என்னும் சொற்களுக்குப் பதிலாக "செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ப) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ம) அத்தகைய இலாபங்கள் மற்றும் வருமானத்தை ஈட்டுவதற்கெனப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட புலமைச் சொத்தைக் கொள்ளுதலிற்கான செலவு;

(ய) அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட ஏதேனும் அரசுரிமைப்பணம் அல்லது நில வாடகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** 2013ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் (vi) என்னும் உட்பந்தியில் "சமூகப் பொறுப்புடமை." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமூகப் பொறுப்புடமை; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் (vi) உட்பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vii) 2013ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் IVஆம் பாகத்தின் 14ஆம் பிரிவின் கீழ் அறவிடப்பட்ட ஏதேனும் பயிர்க் காப்புறுதி அறவீடு,";

(இ) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(க) அத்தகைய ஆளினால் செலுத்தப்பட்ட ஏதேனும் ஆண்டுத்தொகை;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் "கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது:" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலமும்:-

"கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது என்பதுடன், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய செலவினம் முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் அனுமதிக்கப்படாததான வரிமதிப்பீடு ஒன்று செய்யப்படுதலும் வேண்டும்:".

**14.** 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படு கின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஆண்டுத்தொகை, நில வாடகை, அரசுரிமைப் பணம் அல்லது வட்டி என்ற வகையில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆண்டுத்தொகை அல்லது வட்டி என்ற வகையில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(இஇ) ஆயுட்காப்புறுதித் தொழில் மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில் இரண்டையும் கொண்டு நடாத்துவதில் ஈடுபட்டுள்ள ஆளெவரும் 2011ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 53ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக இரு வெவ்வேறு கம்பெனிகளாக அத்தகைய ஆயுட்காப்புறுதித் தொழில் மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில் என்பவற்றை வேறாக பிரிக்குமிடத்து, அத்தகைய பிரித்தலுக்கு முன்னர் உறப்பட்டதும் முன்னதாக முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பாகம் கழிக்கப்பட்டிருக்காததுமான நட்டமானது, ஏதேனும் இருப்பின், அத்தகைய பிரித்தலுக்கு முந்தியதாக உறப்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது அதன் பாகம் இச்சட்டத்தின் ஏதேனும் வேறு ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் முறையில் தோதான கம்பெனிகளின் மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் இருந்து கழிக்கப்படுதல் வேண்டும்:-

(i) ஆயுட் காப்புறுதித் தொழிலுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான நட்டத்தின் அத்தகைய பாகம் நீண்டகால காப்புறுதித்

தொழிலை கொண்டு நடாத்து கின்ற கம்பெனியின் மொத்த நியதிச்சட்ட வருமானத்தில் இருந்து கழிக்கப்படுதல் வேண்டும்;

(ii) பொதுக் காப்புறுதித் தொழிலுக்கு ஏற்றிக் கூறப் படற்பாலதான நட்டத்தின் அத்தகைய பாகம் பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற கம்பெனியின் மொத்த நியதிச் சட்ட வருமானத்தில் இருந்து கழிக்கப்படுதல் வேண்டும்;”; அத்துடன்

(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் “16ஆம் பிரிவின் கீழ், 17ஆம் பிரிவின்கீழ், 18ஆம் பிரிவின்கீழ்,” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக் கும் பதிலாக “16ஆம் பிரிவின் கீழ், 16அ என்னும் பிரிவின்கீழ், 16ஆ என்னும் பிரிவின்கீழ், 16இ என்னும் பிரிவின்கீழ், 16ஈ என்னும் பிரிவின்கீழ், 17ஆம் பிரிவின்கீழ், 17அ என்னும் பிரிவின்கீழ், 18ஆம் பிரிவின் கீழ்,” என்னும் சொற்களையும் இலக்கங் களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** 2011 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான மேலதிகக் காப்பு வாசகத்தின் (ii)ஆம் விடயத்தில் “ஏதேனும் தொழிலிருந்தான வருமானத்திலிருந்து 34ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விடுதொகையின் ஏதேனும் பாகத்தைக்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “ஏதேனும் தொழிலிலிருந்தான வருமானத்திலிருந்து 34ஆம் பிரிவின் (2)ஆம்

உட்பிரிவின் (ப) மற்றும் (ம) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விடுதொகை தவிர்ந்த 34ஆம் பிரிவின் கீழான ஏதேனும் விடுதொகையின் ஏதேனும் பாகத்தைக்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16.** 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப் படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில்-

(அ) அவ்வுட்பிரிவின் (த) என்னும் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம்:-

''(த) அத்தகைய பொறுப்பு முயற்சி 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொழிலைக் கொண்டு நடாத்த ஆரம்பித்திருப்பின் பிரிவு 16இ அல்லது பிரிவு 17அ இன் கீழ் விலக்களிப்பதற்காக தகைமை பெற்றிருக்கும் ஏதேனும் பொறுப்பு முயற்சியின் விரிவாக்கத்தில் 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்கு பின்னர் ஆனால் 2014, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினால் நிலையான சொத்துக்களின் கொள்வனவில் செய்யப்பட்ட ஐம்பது மில்லியன் ரூபாய்களுக்கு குறையாத முதலீடு:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய முதலீடானது, அத்தகைய பொறுப்பு முயற்சியின் விரிவாக்கத்தில் மீளப்புதுப்பிக்கப்படத்தக்க சக்தி வளங்களைப் பயன்படுத்தி மின்வலுப் பிறப்பாக்குவதற்காக அல்லது தொழில்நுட்பவியலை தரமுயர்த்தும் நோக்கத்திற்காக அல்லது ஏதேனும் புதிய தொழில்நுட்பவியலை அறிமுகப் படுத்துவதற்காக அல்லது சக்தி வினைத்திறன் நோக்கத்திற்காகக் கொள்ளப்பட்டிருக்கின்ற ஏதேனும் உயர் தொழில்நுட்ப பொறித் தொகுதியில், இயந்திரத் தொகுதியில் அல்லது சாதனங்களில் அத்தகைய முதலீடானது, 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியில் அல்லது அதன்பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய முதலீடானது தகைமைக் கொடுப்பனவு ஒன்றாகவமைதல் வேண்டும்.'';

(ஆ) அப்பிரிவின் (ப) என்னும் பந்தியில், ''இவற்றுள் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை;'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இவற்றுள் எந்தத் தொகை குறைவானதோ அந்தத் தொகை;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பிரிவின் (ம) என்னும் பந்தியில் ''விஞ்சாத அத்தகைய பாகம்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''விஞ்சாத அத்தகைய பாகம்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவின் (ம) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(ய) *1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஏதேனும் வங்கியிடமிருந்து அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஏதேனும் நிதிக் கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒன்றின் மூலதன மீள்கொடுப்பனவு மீது 2014, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு உறப்பட்டதான ஆறு இலட்சம் ரூபாவை விஞ்சாத ஏதேனும் செலவீனம் ; அக்கடன் தொகையானது, உயர் தொழிலர் ஒருவராகவுள்ளவரும் மற்றும் 106ஆம் பிரிவின் கீழ் விவரத்திரட்டொன்றைக் கொடுத்து தவுபவருமான தனியாள் ஒருவரினால் பெறப்பட்டு ஒன்றில் தனியாகவோ அல்லது வேறு எவரேனும் தனியாளுடன் சேர்ந்தோ வீடொன்றை நிருமாணிப்பதற்கோ அல்லது வீடொன்றை அல்லது வதிவிட இருப்பிடக்கூறுகள் கட்டிடத் தொகுதி ஒன்றில் கூறொன்றை கொள்வனவு செய்வதற்கோ பயன் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்:*

*ஆயின், அத்தகைய கடனானது இன்னுமொரு தனியாளுடன் சேர்ந்து பெறப்பட்டிருந்தால் அல்லது கூட்டு ஆதனமொன்றிற்காகப் பெறப்பட்டிருந்தால், அத்தகைய கழிப்பனவானது, அத்தகைய கடனைப் பெற்றவரான அத்தகைய தனியாளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான செலவினது தொகையை விஞ்சுதல் ஆகாது.*

இப்பந்தியின் நோக்கத்திற்காக “உயர் தொழிலர்” என்பது 40இ என்னும் பிரிவில் அச் சொல்லமைப்புக்கு கொடுக்கப்பட்டதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ர) அத்தகைய செலவினம் 25ஆம் பிரிவின் கீழ் கழிக்கப்படற்பாலதாக இல்லா திருக்குமிடத்தும் மற்றும் விடயத்திற்கு விடயமான அடிப்படையில் அந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க எல்லா நிகழ்வுகளை யும் கருத்திற் கொள்வதன் மூலம் அத்தகைய செலவு நிச்சயிக்கப்படு கின்றவிடத்தும், வேறு ஏதேனும் வங்கியின் அல்லது நிதிக் கம்பெனியின் கொள்ளுதல் அல்லது ஒன்றிணைவுச் செலவு என்ற வகையாக ஏதேனும் வங்கியால் அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஏதேனும் நிதிக் கம்பெனியினால் உறப் பட்ட ஏதேனும் செலவினம்.”;

(2) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில்–

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியில்,“(ந), (ப) மற்றும் (ம)” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, “(ந), (ப), (ம) மற்றும் (ய)” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியில், ''(ண), (த) மற்றும் (ந)'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''(ண), (த), (ந) மற்றும் (ர)'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**17**. 2013 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40அ என்னும் பிரிவு, ''இரண்டாயிரத்தெட்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, ''இரண்டாயிரத்தெட்டு ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2014, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 40இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''உயர் தொழிலர்களின் ஊழியத்திலிருந்தான இலாபங்களின் மீதான வருமான வரி வீதங்கள்.

40இ. (1) 2014, ஏப்பிரல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனும் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், உயர்தொழிலரொருவராக அவரது கடமைகளைப் பிரயோகிக்கையில் (இதனகத்துப்பின்னர் ''இயைபான இலாபங்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஊழியத்திலிருந்தான எவையேனும் இலாபங்களை உள்ளடக்குமிடத்தும், (இதனகத்துப் பின்னர் இப்பிரிவில் ''வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வரிவிதிக்கப்படற்

பாலதான வருமானத்தின் பாகமொன்றின் மீது செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் வீதம் பதினாறு சதவீதத்தை விஞ்சுமிடத்து, அப்போது, வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகம் தொடர்பாகச் செலுத்தப்படற் பாலதான வரி பின்வருமாறு கணிப்பிடப்படுதல் வேண்டும்:-

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகம் இயைபான இலாபங்களின் தொகையை விஞ்சுமிடத்து:-

(i) அத்தகைய இயைபான இலாபங்களின் தொகைக்குச் சமமாகவுள்ளவாறு வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் அத்தகைய பகுதியின் மீது செலுத்தப்படற்பாலதான வரியானது பதினாறு சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் இயைபான பாகத்தின் மீதியின் மீது செலுத்தப்படற்பாலதான வரி, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் கீழ் அவற்றுக்கு ஏற்புடைத்தாகின்றவாறான, பதினாறு சதவீதத்துக்கு மேற்பட்ட அத்தகைய வீதங்களுக்கிணங்கக் கணிக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய இயைபான பாகமானது இயைபான இலாபங்களின் தொகையை

விஞ்சாதவிடத்து, வரி விதிக்கப்படற்பால தான வருமானத்தின் இயைபான பாகத்தின் முழுத்தொகை மீது செலுத்தப்படற்பால தான வரியானது பதினாறு சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “உயர் தொழிலர்” என்பது (105ஆம் அத்தியாயமான) மருத்துவ கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் ஒருவர், பட்டயம் பெற்ற பொறியியலாளர் ஒருவர், பட்டயம்பெற்ற கட்டிடக் கலைஞர் ஒருவர், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர், பட்டயம்பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) உறுப்பினர் ஒருவர் மற்றும் சட்டத்தரணி ஒருவர் என்று பொருளாகும் என்பதுடன், மென்பொருள் பொறியியலாளர் ஒருவரை, (365ஆம் அத்தியாய மான) வான் செலவுச் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற விமானமோட்டி ஒருவரை, கப்பலோட்டும் அலுவலர் ஒருவரை மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற உயர் தொழிலராக அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர் ஒருவரை அல்லது சிரேஷ்ட கல்விமான் ஒருவரை உள்ளடக்கும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50ஆம் பிரிவானது, “அத்துடன் 2014 ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு அவ்வாளினது வரிவிதிக்கப்படற் பாலதான வருமானமானது,” என்னும் சொற்களுக்கும் இலக்கங் களுக்கும் பதிலாக, “அத்துடன் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு அவ்வாளினது வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமானது,” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆம் பிரிவானது, “2014, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பால தான வருமானமானது” என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்

கும் பதிலாக, "ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனி யின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின் றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவானது, "2015, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது முன்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு, அக்கம்பெனியின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானமானது," என்னும் சொற்களுக்கும் இலக்கங்களும் பதிலாக, "ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமானது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 56இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 56இ என்னும் பிரிவானது, "எவரேனுமாளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனுமாளின், 13ஆம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் தவிர்ந்த, இலாபங்களினதும் வருமானங்களினதும் அத்தகைய பாகம்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**23.** முதன்மைச் சட்டவாக்கதின் 58ஆம்பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின் றது:-

*"எவரேனும் ஏற்றுமதி யாளருக்கான எவையேனும் சேவைகளை வழங்குவ திலிருந்து கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வரிவீதம்"*

58. இலங்கையில் உள்ள அத்தகைய ஆளிற்கு அத்தகைய ஏற்றுமதியாளரால் அல்லது வெளிநாட்டு முதல்வரால் அத்தகைய சேவைகளுக்கான கொடுப் பனவு வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படுகின்ற துடன், ஒரு கப்பல் தொழிற்படுத்துநரின் முகவ ரொருவரினால் அத்தகைய முகவரின் வெளிநாட்டு முதல்வருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சேவையுட்பட, அத்தகைய ஏற்றுமதியாளரால் ஒன்றில் நேரடியாக அல்லது ஏதேனும் ஏற்றுமதிமனை ஊடாக ஏற்றுமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின்

உற்பத்தியில் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்வதில் அத்தகைய பண்டங்களின் உற்பத்தியுடன் அல்லது சேவைகளின் வழங்கலுடன் அத்தியாவசிய மாக தொடர்புபட்டவையெனக் கருதப்படக்கூடியதாக விருக்கின்றதான எவையேனும் சேவைகளை எவரேனும் ஏற்றுமதியாளருக்கு அல்லது நேரடியாக அத்தகைய ஏற்றுமதியாளரின் எவரேனும் வெளிநாட்டு முதல்வருக்கு வழங்குவதில் இருந்தான இலாபங்கள் மற்றும் வருமானத்தைக் கொண்டுள்ள தான எவரேனும் ஆளின் (3) ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத்தெல்லைக்குட்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்தின் அத்தகைய பாகமானது பின்வருவதற்கமைவாக இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணாக எது எப்படி யிருப்பினும் இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமான வரி விதிக்கப்படற்பாலதாயிருத் தல் வேண்டும்:-

(அ) அத்தகைய வழங்குதலானது, அது தொடர்பான ஏற்றுமதியின் வெளிநாட்டு நாணயப் பெறுமதியினை இலங்கைக்கு அனுப்பும் பணத்திற்காக சர்வதேசக் கடன் பத்திரம் ஒன்றினால் அல்லது சர்வதேசக் கடன் பத்திரம் ஒன்றிற்கு எதிராக பிந்தாத அடிப்படையின் மீது இலங்கையிலுள்ள வங்கி ஒன்றில் திறக்கப்பட்ட கடன்பத்திரம் ஒன்றினால் மேவப்பட்டிருந்தால்; அல்லது

(ஆ) (i) அத்தகைய வழங்குதலுக்கான பிரதிபல னின் கொடுப்பனவு அத்தகைய ஏற்றுமதி யாளரால் அல்லது வெளிநாட்டு முதல்வ ரால் அத்தகைய ஆளின் பெயருக்குச் செய்யப்பட்ட வரைவு வழிமூலம் அல்லது தந்தி வழிக் கைமாற்றுதல் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்டி ருந்தால்; அத்துடன்

(ii) *அத்தகைய வழங்குதல் தொடர்பான பண்டங்கள் அல்லது சேவைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்ததென தம்மைத் திருப்திப்படுத்துவதற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய வேறு ஆவணச் சான்று முன்வைக்கப்பட்டிருந்தால்.''.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**24.** *2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவானது ''ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால் 59ஊ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக'' என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**25.** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 59ஈ என்னும் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், ''இரண்டு வரிமதிப் பீட்டாண்டுகளுக்கும் ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-*

*''இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்:*

*ஆயினும், எவ்வாறாயினும், ஏதேனும் கம்பெனி 2017, ஏப்பிரல் 1ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்சொல்லப்பட்ட முறையில் அதனது பங்குகளை நிரல்படுத்துகின்றவிடத்தும் மற்றும் அது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் ஆ என்பதன் விடயம் 3இல் குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் வருமானவரியை செலுத்துவதற்கு பொறுப்பானதாக விருக்கின்றவிடத்தும், அத்தகைய கம்பெனி நிரற்படுத்தப்பட்ட பின்னர் பொதுமக்களினால் அதன்*

பங்குகளை வைத்திருக்கப்படுவது இருபது சதவீதத்திற்கு குறையாமல் தொடர்ந்தும் பேணப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்கமைவாக, அத்தகைய வீதமானது அத்தகைய பங்குகள் நிரற்படுத்தப்பட்ட வரிமதிப் பீட்டாண்டுக்கும் மற்றும் அந்த வரிமதிப்பீட் டாண்டினை உடனடுத்து வருகின்ற மேலும் இரண்டு வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் ஐம்பது சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஊ, 59எ மற்றும் 59ஏ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59உ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றன என்பதுடன், அவை இச்சட்டவாக்கத்தின் முறையே 59ஊ, 59எ மற்றும் 59ஏ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

*"உயர்தொழில்சார் சேவைகளை வழங்கு வதிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரி வீதம்.*

59ஊ. (1) 2014ஆம் ஆண்டு ஏப்பிரல் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு இலங்கைப் பிரசை ஒருவராகவுள்ள எவரேனும் தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், உயர்தொழிலர் ஒருவராக உயர்தொழில்சார் சேவைகளை வழங்குவதிலிருந்தான எவையேனும் இலாபங்கள் மற்றும் வருமானத்தை உள்ளடக்கு கின்றவிடத்து, அவ்வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அத்தகைய பாகம் இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''உயர் தொழில்'' என்பது 40இ என்னும் பிரிவில் அச்சொல்லமைப்புக்கு கொடுக்கப்பட்டதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிருமாண நோக்கங்களுக்காக எவரேனும் உயர் தொழிலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது ஏதேனும் வங்கியினால் ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம்.

59எ. (1) அவரால் தனியாகவோ அல்லது இன்னுமொரு தனியாளுடன் சேர்ந்தோ வீடொன்றை நிருமாணிக்கும் நோக்கத்திற்காக, அல்லது வீடொன்றை அல்லது வதிவிட இருப்பிடக் கூறுகள் கட்டிடத்தொகுதி ஒன்றில் கூறு ஒன்றைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக உயர்தொழிலரொருவராகவிருக்கின்ற எவரேனும் தனியாளுக்கு, வழங்கப்பட்ட ஏதேனும் கடன் மீது 2014 ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு வங்கி ஒன்றினால் ஈட்டப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானம் மீது ஏற்புடையதான வரி வீதம் ஐம்பது வீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கத்திற்காக "உயர்தொழிலர்'' என்பது 40இ என்னும் பிரிவில் அச்சொல்லமைப்புக்கு கொடுக்கப்பட்டதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டுக் கப்பல் ஒன்றின் கப்பல் இயக்குனர்கள், கப்பல் கட்டுனர்கள் அல்லது எவரேனும் முகவரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரி.

59ஏ. வெளிநாட்டு கப்பல் ஒன்றின் எவரேனும் கப்பல் இயக்குனரால், கப்பல் கட்டுனரால் அல்லது எவரேனும் முகவரினால் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதான இச்சட்டத்திற்கிணங்கக் கணிப்பீடு செய்யப்பட்ட வரியின் அத்தகைய பாகமானது இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய கப்பல் இயக்குநர், கப்பல் கட்டுநர் அல்லது முகவர் கப்பற் தொழிலில் திறன் விருத்தி பற்றிய பயிற்சியை பயிற்சி பெறுநர்களுக்கு வழங்கியிருப்பின், பத்து சதவீதத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**27.** 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவானது, ''அப்பங்கிலாபமானது இச்சட்டத்தின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாகஅத்தகைய பங்கிலாபத் திலிருந்தான இலாபங்களும் வருமானமும் இச்சட்டத்தின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் வட்டியின், ஆண்டுத் தொகையின், நில வாடகையின் அல்லது அரசுரிமைப் பணத்தின் தொகையை'' என்னும் என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஏதேனும் வட்டியின் அல்லது ஆண்டுத் தொகையின் தொகையை'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 79 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**29.** 2013ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 79ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

> "(3) 2013 ஏப்பிரல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு, தொடர்ச்சியாக அடுத்தடுத்து வரும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வரிமதிப்பீட்டாண்டுகளுக்கு வதிவுள்ளவராக கருதப்பட்டுள்ள தனியாள் ஒருவர் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களைக் கொண்ட இடையறாத காலப்பகுதியொன்றிற்கு அவர் இலங்கையில் தொடர்ச்சியாக இல்லாதிருக்கும் அத்தகைய காலம் வரை வதிகின்றவராகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஆள் அவ்வாறு இல்லாதிருக்கின்றவிடத்து அவர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் அத்தகைய இல்லாமையானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் தொடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்ற வராகக் கருதப்படுதல் வேண்டும்.".

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 105ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "பின்னர் நிச்சயிக்கப்படுதல் வேண்டும்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பின்னர் நிச்சயிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் வருமான வரி அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்-" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 105 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**31.** 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவு, அப்பிரிவின் (19) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 106 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

> "(20) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதி, எவரேனும் ஆளுக்கு, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய ஆளுக்கும், மற்றும் வேறெவரேனும் ஆளுக்கும் அல்லது வகுப்பினரான ஆட்களுக்கும் இடையேயான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்ற எழுத்திலான அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கலாம்.".

**32.** 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்" என்பது -" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2013, ஏப்பிரல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக "அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்" என்பது-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக "அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்" என்பது, இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொரு வராகவுள்ள கணக்காளரொருவர் என்று பொருளாகும்;"; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,"என்று பொருள்படும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடுதல் நியமங்களுக் கிணங்கக் கணக்கிடப்பட்ட தொழிற்பாடுசார் இலாபங்கள் என்று பொருள்படும்;" என்னும் சொற் களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**33.** 2011 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "எவரேனும் தலைவருக்கு" என்னும் சொற்களிலிருந்து "ஒருவராகக் கருதப்படாத வேறெவரேனும் ஆளுக்குப் பணமாக அல்லது பொருளாக நன்மையை வழங்குகின்றவிடத்து," என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "எவரேனும் தவிசாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு தொழில்தருநர் ஒருவர் ஏதேனும் ஊதியத்தைச் செலுத்துகின்ற விடத்தும் அத்துடன் அத்தகைய பணிப்பாளர், தவிசாளர் அல்லது வேறு ஆள் ஊழியர் ஒருவராகக் கருதப்படாதவிடத்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 117அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 117அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய தொழில் தருநர்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள

எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய தொழில் தருநர் -

(அ) (i) அத்தகைய கொடுப்பனவுகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டு மொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத விடத்து; அல்லது

(ii) அத்தகைய ஊழியர் பகிரங்கத் துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட தனியாளொருவராக இருப்பின், அத்தகைய கொடுப்பனவுகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டு மொத்தம் மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவிடத்து,

பத்து சதவீதப்படி ; அல்லது

(ஆ) (i) அத்தகைய கொடுப்பனவுகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டு மொத்தம் மாதமொன்றுக்கு இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து; அல்லது

(ii) அத்தகைய ஊழியர் பகிரங்கத்துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட தனியாளொருவராக இருப்பின், அத்தகைய கொடுப்பனவுகளின் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் கூட்டுமொத்தம் மாதமொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத விடத்து,

பதினாறு சதவீதப்படி,

இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அத்தகைய கொடுப்பனவுகளின் மீது அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதியின் மீது வரியைக் கழிப்பனவு செய்தல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது அத்தகைய நன்மைகளின் பெறுமதி தொடர்பில் 118ஆம் பிரிவின் கீழ் பணிப்புரை எதுவும் வழங்கப்படுதலோ அல்லது கருத்திற் கொள்ளப்படுதலோ ஆகாது.";

(2) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(4) தனியாளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் தருநர்களின் கீழ் தொழிலுக்கமர்த்தப்படுமிடத்து அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியத்தைக் கொண்டவராயிருந்து, ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்தருநர்களிடமிருந்து அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியங்களிலிருந்து மோட்டார் வாகனம் ஒன்றின் தனிப்பட்ட பாவனையிலிருந்தான ஏதேனும் நன்மையைப் பெறுகின்றவிடத்து அல்லது அத்தகைய வாகனத்தின் வழங்குகைக்குப் பதிலாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் படியைப் பெறுகின்றவிடத்து, அல்லது ஏதேனும் போக்குவரத்து வசதியின் பெறுமதியைப் பெறுகின்றவிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட அத்தகைய நன்மைகளின் அல்லது படியின் அல்லது அத்தகைய பெறுமதியின் கூட்டுமொத்தத்தின் விஞ்சுதொகை அத்தகைய ஊழியரின் வரி செலுத்தப்பாலதான ஊழியத்திலிருந்தான வருமானத்தின் பாகமாக அமைதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''விலக்களிக் கப்பட்டதாகவுள்ள ; அல்லது '' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''விலக்களிக்கப்பட்டதாகவுள்ள;'' என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''கழிக்கப் படற்பாலதாகவுள்ள ;'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''கழிக்கப்படற்பாலதாகவுள்ள; அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

''(ஈ) இலங்கை மத்திய வங்கியுடனான நிலையான வைப்பு வசதியின்கீழ் ஏதேனும் பங்குபற்றுகின்ற நிறுவனத்தினால் இடப்பட்ட வைப்புக்களின் மீது செலுத்தப்பட்டதாகவுள்ள, '';

**36.** 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

''(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கழிப்பனவு இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஏதேனும் வட்டிக்கு ஏற்புடையதாத லாகாது.''.

**37.** 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''9 ஆம் பிரிவின் (ச) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து அல்லது கழிப்பன விலிருந்து'' என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக ''9 ஆம் பிரிவின் (அஅ) என்னும் பந்தியில் அல்லது (ச) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வட்டியிலிருந்து அல்லது கழிப்பனவிலிருந்து'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**38.** 2007ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 137ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"(3) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம் தொடர்பில் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வட்டி வருமானம் என்பது ஏதேனும் பிணையத்தில், முறியில் அல்லது உண்டியலில் இருந்து ஈட்டப்பட்ட அல்லது திரண்ட இலாபங்களும் வருமானமும் என்று பொருளாகும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**39.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 163ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில்,"ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளின் ஊழியத்திலிருந்து கிடைக்கும் இலாபங்கள் தொடர்பிலான எவையேனும் நிலுவைகள் அவ்வாளினால் பெறப்பட்டதன் விளைவாக அவ்வரிமதிப் பீட்டாண்டு தொடர்பில் அவ்வாளினால் கொடுபடற் பாலதான வருமானவரியின் மதிப்பீட்டுக்கு இவ்வுட்பிரிவில் உள்ளதெதுவும் ஏற்புடையதாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

"ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் -

(i) அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காக அவ்வாளின் ஊழியத்திலிருந்தான இலாபங்கள் தொடர்பான எவையேனும் நிலுவைகள் அத்தகைய ஆளினால் பெறப்பட்டதன்; அல்லது

(ii) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் எந்த வரிமதிப்பீட்டாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டனவோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக அத்தகைய ஏற்றுக் கொள்ளுதலுக்கு இணங்கச் செய்யப்பட்ட ஏதேனும் சீராக்கலின்,

விளைவாக அவ்வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் அவ்வாளி னால் கொடுபடற்பாலதான வருமான வரியின் மதிப்பீட்டுக்கு இவ்வுட்பிரிவில் உள்ளதெதுவும் ஏற்புடையதாகாது:''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 176 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 176ஆம் பிரிவு, அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''ஒரு பூரண வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஐந்து பூரண வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக,'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவு, அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(3) ஓராம் உட்பிரிவினதும் (2) ஆம் உட்பிரிவினதும் பொதுமைக்குப் பங்கமின்றி, இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கிணங்கவுள்ளதெனக் கொள்ளப்படுகின்ற அறிவித்தல், வரி மதிப்பீடு, சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கை எதுவும், அது உள்ளீட்டிலும் பயனிலும் இச்சட்டத்திற்கு அல்லது ஆணையாளர் தலைமையதி பதியினால் நிருவகிக்கப்பட்ட வேறேதேனும் சட்டத்திற்கு இசைந்தொழுகியதாகவிருப்பின் அல்லது அதன் உட்கருத்துக்கும் பொருளுக்கும் இணங்கியதாக விருப்பின், அத்துடன் வரிமதிப்பீடு செய்யப்பட்ட அல்லது வரிமதிப்பீடு செய்யப்படுவதற்கு உட்கருதப் பட்ட அல்லது அதன்மூலம் பாதிக்கப்பட்ட ஆள் பொது உட்கருத்துக்கும் புரிந்துணர்வுக்கும் இணங்க அதன்கண் குறிக்கப்பட்டிருப்பின், வர்த்தமானியில் வெளியிடப் பட்டவாறாக இலங்கை உண்ணாட்டரசிறைச் சேவைக் குறிப்புகளின் நடைமுறைப்படுத்துகை காரணமாக, விடயத்துக்கேற்ப, அத்தகைய அறிவித்தலை, மதிப்பீட்டை, சான்றிதழை அல்லது வேறு நடவடிக்கை யைக் கையொப்பமிட்ட அல்லது நிறைவேற்றிய அலுவலரின் பதவிப் பெயரிலான ஏதேனும் வேறுபாடு காரணமாக ஒழிக்கப்படுதலோ, அல்லது வறிதான தென அல்லது வறிதாக்கப்படற்பாலதெனக் கருதப் படுதலோ அல்லது பாதிக்கப்படுதலோ ஆகாது.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 209 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது அமைச்சு அல்லது செயலாளர் தவிர்ந்த" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சர் அல்லது நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தவிர்ந்த" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) அலுவலக முறையான கடமைகளை நிறைவேற்றும்போது, சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்திலான கடிதமொன்றின் மூலம் தேவைப்படுத்தப்படின், அத்தகைய கடிதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக, ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவையும், சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியினால் எந்த ஆள் தொடர்பில் புலன் விசாரணையொன்று நடத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடியவையுமான எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்;

(ஊ) அலுவலக முறையான கடமைகளை நிறைவேற்றும்போது, குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எழுத்திலான கடிதமொன்றின் மூலம் தேவைப்படுத்தப்படின், அத்தகைய கடிதத்தில் குறித்

துரைக்கப்பட்டவாறாக, ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவையும், குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் எந்த ஆள் தொடர்பாக தகவல் அல்லது புள்ளிவிபரம் சேகரிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத் துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடியவையுமான எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டும்;

(எ) பொதுமக்களின் நலனைப் பாதிக்கின்ற ஏதேனும் குற்றச்செயலை அல்லது குற்றச் செயலின் மூலம் பெறப்பட்ட வரும்படிகளைப் புலனாய்வு செய்யும்போது, எவரேனுமாளுக் கெதிராக, அல்லது இலஞ்சத்துக்காக அல்லது ஊழலிற்காக எவரேனுமாளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்பட்ட பின்னர், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் மூலம் வழங்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றித் தேவைப்படுத்தப்படின், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவாறாக, அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையின் அல்லது ஒரு மகனின் அல்லது மகளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுதலும் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய ஆள், வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் தொடர்பான ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை வழங்குதலும் வேண்டும்.”; அத்துடன்

(3) அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவில், "அமைச்சுச் செயலாளருக்கோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சருக்கோ அல்லது அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 212 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 212 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "ஐந்நூறு ரூபாவை விஞ்சுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்நூறு ரூபாவை விஞ்சுதலாகாது;"; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(உ) இலங்கையில் ஏற்புடையற்பாலனவான நிதிக் கணக்கீட்டு நியமங்கள் மாற்றப்படும் போதெல்லாம் இலாபங்களையும் வருமானத்தையும் கணிப்பீடு செய்யும் முறை.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**44.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 217ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், (1)ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின் (ii)ஆம் விடயத்தை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "நிறைவேற்று அலுவலர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

**45.** 2013ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை, அவ்வட்டவணையின் பாகம் ஆ என்பதில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

(1) அப்பாகத்தின் 1ஆம் விடயத்தில் -

(அ) அவ்விடயத்தின் (இ) என்னும் பந்தியில், “(i) அதன் வரி விதிக்கப்படற்பாலதான” என்ற சொற்கள் தொடக்கம் அவ்விடயத்தின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

“(அ) (i) அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாதுள்ள;

(ii) பாகம் - அ இல் குறிப்பீடு செய்யப் பட்ட கம்பெனியொன்றாகவிராத; அத்துடன்

(ஆ) கொளிக் கம்பெனியாக, துணைநிலைக் கம்பெனியொன்றாக, அல்லது கம்பெனிகள் தொகுதியொன்றின் இணைக் கம்பெனியொன்றாகவிராத,

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதில் ஈடுபட்டிருக்கின்ற ஏதேனும் கம்பெனி தவிர்ந்த ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானத்தின் மீது

12 சதவீதப்படி;”;

(ஆ) அவ்விடயத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2014, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு,

(அ) (i) அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சாதுள்ள;

(ii) பாகம் - அ இல் குறிப்பீடு செய்யப் பட்ட கம்பெனியொன்றாகவிராத; அத்துடன்

(ஆ) கொளிக் கம்பெனியாக, துணைநிலைக் கம்பெனியொன்றாக, அல்லது கம்பெனிகள் தொகுதியொன்றின் இணைக் கம்பெனியொன்றாகவிராத,

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனி தவிர்ந்த ஏதேனும் கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது

12 சதவீதப்படி;

பந்தி (ஆ), பந்தி (இ) மற்றும் பந்தி (ஈ) என்பவற்றின் (ஆ) என்னும் விடயத்தின் நோக்கத்துக்காக, "கொளிக் கம்பெனி", "துணை நிலைக் கம்பெனி" மற்றும் "கம்பெனிகள் தொகுதி" என்பன, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் முறையே அவற்றுக்குள்ள அதே பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கம்பெனியின் கொளிக் கம்பெனியொன்றை யும் அல்லது துணைநிலைக் கம்பெனியொன்றையும் உள்ளடக்கும்.";

*(2) அப்பாகத்தின் 2 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-*

*“2. (அ) அதற்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் 5,000,000 ரூபாவை விஞ்சுகின்ற; அல்லது*

*(ஆ) அத்தகைய கம்பெனி கொளிக் கம்பெனி யொன்றாக, துணைநிலைக் கம்பெனியொன் றாக அல்லது கம்பெனிகள் தொகுதியொன் றின் இணைக் கம்பெனியொன்றாக இருப்பின்,*

*2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாகவுள்ளதும் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டவொரு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை யினால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலகமுறையான நிரலில் அதன் பங்குகள் எந்த வரி மதிப்பீட்டாண்டில் முதன்முதலாக விலைகோரப்பட்டுள்ளதோ அந்த வரி மதிப்பீட்டாண்டாகவுள்ளதுமான (இதனகத்துப் பின்னர் முதலாவது வரிமதிப்பீட்டாண்டு” எனக் குறிப்பீடு செய்யப்படும்), வரிமதிப்பீட்டாண்டிற்கும், அந்த முதலாவது வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்து வரும் நான்காண்டுக் காலப்பகுதிக்குள்ளான ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும், அத்தகைய ஏதேனும் கம்பெனியின்;*

*அவ்வரி மதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீது:*

*(i) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண் டிற்கு*

*33 1/3 சதவீதப்படி;*

(ii) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு:

28 சதவீதப்படி;

ஆயின், அத்தகைய முதலாவது வரிமதிப்பீட்டாண்டு 2006, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டாக இருக்குமிடத்து, 33 1/3 சதவீதம், அத்தகைய நான்காண்டுக் காலப்பகுதியினுள் அடங்குகின்ற, ஆனால் 2006, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் ஐந்தாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**46**. 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஐந்தாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அட்டவணையின் 22 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"22. பிரிவு 58இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் மீதான வருமானவரி வீதம் -

(அ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு

15 சதவீதம் ;

(ஆ) 2011, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2014, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு

| | |
|---|---|
| முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு: | |
| | 12 சதவீதப்படி ; |
| (இ) 2014, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு | முதலாம் அட்டவணையின்படி, ஆனால் தனியாளொருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்துக்கும் கம்பெனியொன்றுக்கு 12 சதவீதத்துக்கும் அமைய;"; |

(2) அவ்வட்டவணையின் 33 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"33. பிரிவு 59ஆ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனுமாளின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் ஏற்புடையற்பாலதான வருமானவரி வீதம் -

| | |
|---|---|
| (அ) 2014, ஏப்பிறல் 1ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு: | முதலாம் அட்டவணையின்படி, ஆனால் தனியாளொருவருக்கு ஆகக் கூடியது 10 சதவீதத்துக்கும் கம்பெனியொன்றுக்கு |

10 சதவீதத்துக்கும் அமைய;

(ஆ) 2014, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு — முதலாம் அட்டவணையின்படி, ஆனால் தனியாளொருவருக்கு ஆகக்கூடியது 12 சதவீதத்துக்கும் கம்பெனியொன்றுக்கு 12 சதவீதத்துக்கும் அமைய;";

(3) அவ்வட்டவணையின் 42ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"42. பிரிவு 56அ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியிலிருந்து எவரேனுமாளின் இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம் -

12 சதவீதம்;";

(4) அவ்வட்டவணையின் 45ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

“46. பிரிவு 59ஊ என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஓர் உயர்தொழிலிலிருந்து எவரேனும் தனியாளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகத்துக்கு ஏற்புடையற்பாலதான வருமான வரி வீதம் -

| | |
|---|---|
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் முதலாவது 500,000/- ரூபாவின் மீது | 4 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 500,000/- ரூபாவின் மீது | 8 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000,000/- ரூபாவின் மீது | 12 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அடுத்த 10,000,000/- ரூபாவின் மீது | 14 சதவீதம் |
| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மீதியின் மீது | 16 சதவீதம் .”. |

செல்லுபடி யாக்குதல்.

47. இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் ஏற்புடைமையின் பயனைக் கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக, 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் தொடங்கி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகர் சான்றுரை எழுதிய தேதியில் முடிகின்ற காலப்பகுதியின்போது எவரேனும் ஆளிடமிருந்து அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட வரித் தொகையானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவர் சார்பாக அத்தகைய வரியை அறவிட்ட அல்லது சேகரித்த அத்தகைய ஆளினால் இச்சட்டத்தின்கீழ் செல்லுபடியுள்ளதாக வும் மற்றும் சட்டமுறையாகவும் அறவிடப்பட்ட அல்லது சேகரிக் கப்பட்ட வரித்தொகை எனக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடு அத்தகைய காலப்பகுதி யின்போது அறவிடப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் தீர்மானத்தை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் தீர்க்கப்படாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தல் ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

48. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்